செய்தி வெளியீடு எண்: 447 நாள்: 24.07.2019

**அருள்மிகு அத்திவரதர் வைபவத்திற்கு**
**வருகின்ற பக்தர்களுக்கு அன்னதானம் வழங்க**
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள்**
**ஒரு லட்சம் ரூபாய் நன்கொடை**

காஞ்சிபுரம் அருள்மிகு தேவராஜ சுவாமி திருக்கோயில் அனந்தசரஸில் இருந்து எழுந்தருளியுள்ள அருள்மிகு அத்திவரதரின் வைபவம், 2019–க்கான ஏற்பாடுகள் குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், காவல் துறை இயக்குநர் (DGP), சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், போக்குவரத்து துறை முதன்மைச் செயலாளர், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையர், நகராட்சி நிர்வாக ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர், காஞ்சிபுரம் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் ஆகியோருடன் திருக்கோயிலில் பக்தர்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள குடிநீர், சுகாதாரம், போக்குவரத்து, பாதுகாப்பு மற்றும் இதர வசதிகள் ஏற்பாடுகள் குறித்து 23.7.2019 அன்று ஆய்வு செய்தார்.

ஆய்வுக்குப் பின்னர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தொலை தூரத்தில் இருந்து அருள்மிகு அத்திவரதரை தரிசிக்க வரும் பக்தர்களின் தேவையை கருத்தில் கொண்டு, அன்னதானம் வழங்குவதற்காக தனது சொந்த பணத்திலிருந்து ஒரு லட்சம் ரூபாய் நன்கொடை வழங்கி, அன்னதானத்திற்கு நிதி வழங்கும் திட்டத்தை துவக்கி வைத்தார்கள் .

மேலும், அருள்மிகு அத்திவரதரை தரிசிக்க வரும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்க நன்கொடை கொடுக்க விரும்புவோர், கீழ்க்கண்ட பெயருக்கு காசோலையாகவோ / வரைவோலையாகவோ அனுப்பலாம்.

**“அருள்மிகு தேவராஜ சுவாமி திருக்கோயில், காஞ்சிபுரம்.**
**ARULMIGU DEVARAJA SWAMY TEMPLE, KANCHEEPURAM.”**

காசோலை / வரைவோலை கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பலாம்:

செயல் அலுவலர்,
அருள்மிகு தேவராஜ சுவாமி திருக்கோயில்,
காஞ்சிபுரம்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**